**Sub Court, Eraniel**

O.S. No.81/2024
Date: 11.03.2026.
PW1 - திரு.நாராயண கிருஷ்ணன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

பிரதிவாதி அறிவழகன் எனது உறவினர் மற்றும் நண்பர் இல்லை. எனக்கும் பிரதிவாதிக்கும் வேறு பழக்கவழக்கங்கள் எதுவும் கிடையாது என்றால், சரிதான். எனது ஊருக்கும் பிரதிவாதியின் ஊருக்கும் இடையே சுமார் 15 கி.மீ தூரம் இருக்கும் என்றால், சரிதான். பிரதிவாதி அரசு வேலை அல்லது உயர் பதவியில் இல்லை என்றால், அது விபரங்கள் எனக்குத் தெரியாது. பிரதிவாதி எனது மகனுக்கு அரசு வேலை வாங்கி தரும் அளவிற்கு பெரிய பதவியில் இல்லை என்றால், சரியல்ல. பொதுவாக அரசு வேலை கிடைப்பதற்கு TNPSC மூலமாக தேர்வு எழுதி வெற்றி பெற வேண்டும் என்ற விபரம் எனக்குத் தெரியும். பணத்தின் மூலமாக அல்லது சிபாரிசுகள் மூலமாக அரசு வேலையும் வாங்க முடியாது என்றால், அது விபரம் எனக்குத் தெரியாது. பிரதிவாதிக்கு பணம் வங்கி மூலமாக கொடுத்த பிறகு, போலீசில் புகார் கொடுத்த போது தான் நேரடியாக தெரியும் என்றால், அவரிடம் நான் போனில் பேசியிருக்கிறேன். அவரை எனக்குத் தெரியும். பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் ரூ.10,00,000/- கேட்டார் என்ற விபரத்தை நான் எனது பிராதில் குறிப்பிட்டவில்லை என்றால், சரிதான். பிரதிவாதி என் வீட்டிற்கு வந்து பணம் எதுவும் பெற்றுக் கொள்ளவில்லை என்றால், சரிதான். வங்கியில் 3 தவணையாக பணம் அனுப்பினேன். எனது பிராது மற்றும் வா.சா.ஆ.2 அறிவிப்பில் எனது வீட்டில் வந்து பணம் வாங்கியதாக குறிப்பிட்டு இருந்தால், அது சரியல்ல. பிரதிவாதி ரூ.2,00,000/-ஐ என்னிடம் எப்போது தந்தார் என்ற தேதி விபரங்களை நான் என் பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரிதான். அவ்வாறு பிரதிவாதி ரூ.2,00,000/- எனக்கு தந்ததை காண்பிக்க ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால், சரிதான். எனது மகனுக்கு அரசு வேலை வாங்கி தருவதாக பிரதிவாதிக்கும் எனக்கும் எழுத்து பூர்வமாக ஒப்பந்தம் எதுவும் இல்லை என்றால், வாய் மொழியாக நாங்கள் இருவரும் பேசிக் கொண்டோம். வேலை வாங்கி தருவேன் என்று உறுதிமொழியாக பிரதிவாதி எதுவும் எழுதி கொடுக்கவில்லை என்றால், சரிதான். ரத்தினதாஸ் என்பவர் எனது ஊரை சேர்ந்த எனது குடும்ப நண்பர். ஐயாசாமி என்பவர் எனது ஊரை சார்ந்தவர் என்றால், அது விபரம் எனக்கு

தெரியாது. ரத்தினதாஸ் மூலமாக ஐயாசாமியை எனக்கு தெரியும். ஐயாசாமி எனது பக்கத்து ஊரை சார்ந்தவராக இருக்கலாம். ரத்தினதாசும், ஐயாசாமியும் காவல் துறையில் பணிபுரிந்து தற்போது ஓய்வு பெற்று உள்ளார்கள் என்றால், ஓய்வு பெற்றிருக்கலாம். நான் அரசு போக்குவரத்து கழகத்தில் ஓட்டுநராக இருந்து பணி ஓய்வு பெற்றிருக்கிறேன். எனக்கு ஓட்டுநர் வேலை ரத்தினதாஸ் மூலமாக ஐயாசாமி தான் வாங்கி கொடுத்தார் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 06.06.2023 ல் மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் எழுதி கொடுத்தது என்றால், சரிதான். வா.சா.ஆ.1ல் தனிநபர் சாட்சியங்கள் கையொப்பம் செய்யவில்லை என்றால், சரிதான். வா.சா.ஆ.1 போலீஸ் மூலமாக தயார் செய்யப்பட்டது என்றால், சரியல்ல. அந்த சமயத்தில் மாவட்ட கண்காணிப்பாளரிடம் நான் புகார் கொடுத்தேன் என்றால், சரிதான். அந்த புகார் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டிருக்கிறது என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.6 ல் ரத்தினதாஸ் மூலமாக அவருடைய பரிந்துரையின் படி ஐயாசாமியின் மூலமாக TNPSC Group 4 ல் தேர்வில் எனது மகனை வெற்றி பெற செய்து தருவதாக என்னிடம் ரூ.10,00,000/- கேட்டதாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அதில் ஐயாசாமியை 1ம் எதிர் மனு தாரராக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். அந்த ஐயாசாமியையோ, ரத்தினதாஸையோ இந்த வழக்கில் நான் பிரதியாக கட்சி சேர்க்கவில்லை என்றால், சரிதான். ரத்தினதாசும், ஐயாசாமியும் மற்றும் பிரதிவாதி ஆகியோரிடம் பேசி தான் பிரதிவாதிக்கு பணம் அனுப்பினேன். எனது புகார் மனுவில் ஐயாசாமியும், பிரதிவாதியும் நம்பிக்கை மோசடி செய்து பணம் பறித்ததாக குறிப்பிட்டிருக்கிறேன் என்றால், சரிதான். புகார் மனுவின் அடிப்படையில் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால், சரிதான். ஐயாசாமியும், ரத்தினதாசும் ஓய்வு பெற்ற காவல் துறையினர் என்பதால் பிரதிவாதியை காவல் நிலையத்திற்கு மனுவின் அடிப்படையில் அழைத்து, ஐயாசாமி மற்றும் ரத்தினதாஸ் மீது நடவடிக்கை எடுக்காமல், பிரதிவாதியின் மீது நடவடிக்கை எடுத்து வா.சா.ஆ.1 ஆவணத்தை எழுதி வாங்கினேன் என்றால், சரியல்ல. வா.சா.ஆ.1 சம்மத பத்திரம் மணவாளக்குறிச்சி காவல் நிலையத்தில் வைத்து எழுதப்பட்டது என்றால், சரிதான். அதில் பிரதிவாதியின் கையொப்பம் மட்டும் வாங்கி கொண்டு, விபரங்களை நான் எழுதிக் கொண்டேன் என்றால், சரியல்ல. அறிவழகன் தான் எழுதி கையொப்பம் செய்தார். தற்போது என்னிடம் காட்டப்படும் பத்திரத்தை எழுதியது எனது மகன் மோகன சுதன் என்றால், சரிதான். அது உறுதி மொழி ஆவணத்தின் நகல் பி.வ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அதன் அசல் எனது மகனிடம் உள்ளது என்றால், அதை Inspector டம் கொடுத்து விட்டேன். அதன் பெயரில் தான் சம்மத பத்திரம் வாங்கி கொடுத்தார். சம்மத பத்திரமும், உறுதி மொழி பத்திரமும் போலீஸ் மூலமாக தயார் செய்யப்பட்டு என்னிடம் உள்ளது என்றால், சரியல்ல. அதை Inspector டம் கொடுத்து விட்டேன்.

(பிரதிவாதி தரப்பில் கேட்டுக் கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.